பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

04 05 2025 **SUNDAY** 12 40 **PM**

தலைப்புச் செய்திகள்

1. சிங்கப்பூர் நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்றுள்ள அந்நாட்டு பிரதமர் திரு. **Lawrence Wong**–கிற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

2. **Arctic** பிராந்தியத்தில் உள்ள நாடுகளுடனான நட்புறவில் முன்னேற்றம் காண இந்தியா ஆர்வம் காட்டி வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

3. இந்தியாவின் கண்காணிப்பு திறன்களை மேம்படுத்தும் வகையில், **Hawk Eye** தொழில்நுட்பத்தினை வழங்க அமெரிக்கா ஒப்புதல் தெரிவித்துள்ளது.

4. ரொமேனியாவில் புதிய அதிபரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் இன்று நடைபெறுகிறது.

5. நியூயார்க்கில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில், இந்தியாவின் அபய் சிங் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<<

சிங்கப்பூர் நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்றுள்ள அந்நாட்டு பிரதமர் திரு. **Lawrence Wong**–கிற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்தியாவும் சிங்கப்பூரும் வலுவான பன்முகத்தன்மை வாய்ந்த நட்புறவை பேணி வருவதாக கூறியுள்ளார்.

இருநாடுகளும் மேலும் முன்னேற்றம் காணும் வகையில் திரு. **Lawrence Wong**–குடன் இணைந்து பணியாற்றுவதை தாம் ஆவலோடு எதிர்நோக்கியிருப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, சிங்கப்பூரில் நடந்த பொதுத்தேர்தலில் தற்போது ஆட்சியில் உள்ள மக்கள் செயல்பாட்டு கட்சி 87 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி மீதமுள்ள 10 இடங்களை கைப்பற்றியது.

>>>>>><<<<<<<

**Arctic** பிராந்தியத்தில் உள்ள நாடுகளுடனான நட்புறவில் முன்னேற்றம் காண்பதில் இந்தியா ஆர்வம் காட்டி வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அவர், **Arctic** பிராந்தியத்திற்கு இந்தியா அதிக முக்கியத்துவம் தந்து வருவதாக குறிப்பிட்டார்.

சில ஆண்டுகளுக்கு முன்பு இதற்காக **Arctic** கொள்கையை மத்திய அரசு கொண்டு வந்ததாக அவர் தெரிவித்தார்.

இதன் மூலமாக, **Svalbard K-SAT** ஒப்பந்தங்கள் கையெழுத்தானதாகவும், அது விண்வெளித் துறையில் நாட்டின் முன்னேற்றத்திற்கு வித்திட்டதாகவும் திரு ஜெய்சங்கர் கூறினார்.

பரஸ்பர ஆர்வம் மற்றும் நட்புறவு செயல்பாட்டின் அடிப்படையில் **Arctic** பிராந்திய நாடுகளுடன் இணைந்து செயல்பட இந்தியா தயாராக இருப்பதாவும் அமைச்சர் தெரிவித்தார்.

**>>>>>><<<<<<<**

இந்தியாவின் கண்காணிப்பு திறன்களை மேம்படுத்தும் வகையில், **Hawk Eye** தொழில்நுட்பத்தினை வழங்க அமெரிக்கா ஒப்புதல் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்நாட்டு பாதுகாப்பு ஒத்துழைப்பு முகமை வெளியிட்டுள்ள அறிக்கையில், தற்போதுள்ள சூழ்நிலையில், இந்தியாவின் கடல்சார் பாதுகாப்பை உறுதிப்படுத்த இந்த தொழில்நுட்பம் உதவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய பசிபிக் பிராந்தியத்தில் இந்தியாவின் கடல்சார் திறன்களை மேம்படுத்த இத்தொழில்நுட்பம் பயனுள்ளதாக அமையும் என்று அதில் கூறப்பட்டுள்ளது. பூமியை ஒட்டியுள்ள கீழ்மட்டப் பாதையில் செயல்படும் செயற்கைக்கோள்களை பயன்படுத்தி, எல்லை ஊடுருவல், கடத்தல் உள்ளிட்ட சட்டவிரோத செயல்பாடுகளை தடுக்க இத்தொழில்நுட்பம் உதவுவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இத்தொழில்நுட்பம் தொடர்பான மென்பொருள் பயிற்சி மற்றும் ஆதரவை இந்தியாவுக்கு அமெரிக்கா வழங்கும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**>>>>>><<<<<<<**

குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர், இன்று மத்தியப்பிரதேச மாநிலம், குவாலியருக்கு பயணம் மேற்கொள்கிறார். அங்குள்ள கல்வி நிலையம் ஒன்றில் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களுடன் அவர் உரையாடுகிறார். மேலும் குவாலியரில் சில நிகழ்ச்சிகளில் குடியரசு துணைத்தலைவர் பங்கேற்கவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>>>><<<<<<<**

காசியைச் சேர்ந்த யோகா ஆசிரியர் திரு. Shivanand Baba மறைவுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், யோகா மற்றும் ஆன்மிக செயல்பாடுகளுக்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்தவர் Shivanand Baba என்றும், அவரது வாழ்வு ஒவ்வொரு தலைமுறைக்கும் ஊக்கமளிப்பதாக அமையும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**>>>>>><<<<<<<**

**MBBS, BDS** உள்ளிட்ட இளநிலை மருத்துவ பட்டப் படிப்புகளுக்கான நீட் தேர்வு, நாடு முழுவதும் இன்று நடைபெறுகிறது.

நாடு முழுவதும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மையங்களிலும், வெளிநாடுகளில் 13 நகரங்களிலும் இத்தேர்வு நடைபெறுகிறது. பிற்பகல் 2 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும் இத்தேர்வில், மொத்தம் 22 லட்சத்து 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ – மாணவியர்கள் பங்கேற்கின்றனர். தேசிய தேர்வு முகமையால் நடத்தப்படும் இந்த தேர்வு, தமிழகத்தில் 31 மையங்களில் நடைபெறுகிறது.

>>>>>><<<<<<<

ஆட்டிசம் எனப்படும் மனஇறுக்கம் தொடர்பான வழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வேலூர் மாவட்டத்தில் இன்று சைக்கிள் பேரணி நடைபெற்றது. ஆட்டிசத்தால் பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு பெற்றோரும், பொதுமக்களும் ஆதரவாக செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்த பேரணி நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<<

உத்ரகாண்டில் உள்ள சமோலி மாவட்டத்தில் உள்ள பத்ரிநாத் ஆலயம் பக்தர்கள் வழிபாட்டுக்காக இன்று காலை திறக்கப்பட்டது. இந்த விழாவில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்றனர். ஆலயத்தை சுற்றியுள்ள பகுதிகளில் பாதுகாப்பு, சுகாதாரம், போக்குவரத்து, தங்குமிட வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும், அங்கு கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டு, பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<<

பஞ்சாப் மாநிலம், அமிர்தசரஸில் பாகிஸ்தானுக்காக உளவு பார்த்த குற்றச்சாட்டின் அடிப்படையில் இரண்டு பேரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர். முதல்கட்ட விசாரணையில் அவர்களுக்கு பாகிஸ்தான் உளவு அமைப்புகளுடன் தொடர்பிருப்பதாக தெரியவந்துள்ளதாகவும், அவர்களிடம் தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் காவல்துறை தெரிவித்துள்ளது.

அங்குள்ள ராணுவ படைப்பிரிவு பகுதிகள் மற்றும் விமான தளங்கள் குறித்த ரகசிய தகவல்கள் மற்றும் புகைப்படங்களை கசியச் செய்த விவகாரத்தில் அவர்கள் கைது செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<<

திருவாரூர் மாவட்டம், கருவேப்பஞ்சேரியில் நான்கு சக்கர வாகனம் ஒன்று அரசு பேருந்துடன் நேருக்கு நேர் மோதியதில் நான்கு பேர் உயிரிழந்தனர். நான்கு சக்கர வாகனம் கட்டுப்பாட்டை இழந்து, பேருந்துடன் மோதியதால், இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது. அந்த வாகனத்தில் பயணித்த கேரளாவைச் சேர்ந்த 4 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும், இந்த விபத்தில் காயமடைந்தோருக்கு திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் காவல்துறை கூறியுள்ளது.

>>>>>><<<<<<<

ரொமேனியாவில் புதிய அதிபரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் இன்று நடைபெறுகிறது.

இதற்காக அந்நாட்டில் 18 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

ரொமேனிய ஒன்றிய கூட்டணியின் தலைவரான திரு. **George Simon** இத்தேர்தலில் போட்டியிடுகிறார்.

கடந்த நவம்பர் மாதம் நடந்த தேர்தலில் ஊழல் மற்றும் ரஷ்யாவின் தலையீடு நிகழ்ந்ததாக கூறி திரு. **Calin Georgescu** பெற்ற வெற்றியை அந்நாட்டு உச்சநீதிமன்றம் ரத்து செய்திருந்தது.

இதனையடுத்து, இன்று தேர்தல் நடைபெறுகிறது.

இத்தேர்தலில் ஏதேனும் ஒரு கூட்டணி 50 சதவீதத்திற்கும அதிகமான வாக்குகளை பெறாத நிலையில், இம்மாதம் 18ஆம் தேதி மீண்டும் தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<<

நியூயார்க்கில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில், இந்தியாவின் அபய் சிங் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார். அரையிறுதி ஆட்டத்தில் அவர் பாகிஸ்தானின் **Noor Zaman**–ஐ 3-0 என்ற கணக்கில் வென்றார். இறுதியாட்டத்தில் அவர், இங்கிலாந்தின் **Sam Todd-** ஐ எதிர்கொள்கிறார்.

>>>>>><<<<<<<

பெரு நாட்டின் லிமா நகரில் நடைபெற்று வரும் உலக இளையோர் பளுதூக்குதல் சாம்பியன் போட்டியில், இந்தியா 3 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

மகளிர் 40 கிலோ எடைப்பிரிவில் **Jyosna Sabar**-ம், ஆடவர் 49 கிலோ எடைப்பிரிவில் **Harsabarthan Sahu-**வும், ஆடவர் 96 கிலோ எடைப்பிரிவில் **Parv Chaudhary**–யும் இப்பதக்கங்களை பெற்றுள்ளனர்.

>>>>>><<<<<<<

முத்தரப்பு மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் முதலில் பேட் செய்து வரும் இந்தியா சற்றுமுன்வரை 40 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 205 ரன் எடுத்துள்ளது.

கொழும்பில் நடைபெற்று வரும் ஆட்டத்தில், டாஸ் வென்ற இலங்கை அணி பந்துவீச தீர்மானித்தது.

>>>>>><<<<<<<

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் கொல்கத்தா - ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது. கொல்கத்தாவில் நடைபெறவுள்ள இப்போட்டி பிற்பகல் 3.30 மணிக்கு தொடங்குகிறது. மற்றொரு ஆட்டத்தில் பஞ்சாப் - லக்னோ அணிகள் மோதுகின்றன. தரம்சாலாவில் நடைபெறவுள்ள இப்போட்டி, இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

>>>>>>END<<<<<<<